**மேனிலை இரண்டாம் ஆண்டு**

**வணிகவியல்**

**மாதிரி வினாத்தாள் -2**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண்கள் : 90**

**பகுதி – அ**

**சரியானவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 X 1 = 20

1 பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு

அ. தனி வணிகர் ஆ. கூட்டாண்மை

இ. கூட்டுப் பங்கு நிறுமம் ஈ.இந்துக் கூட்டுக் குடும்பம்

2 பொதுத் துறை அமைப்பில் மிகவும் பழமையானது ________________

அ. வாரிய அமைப்பு ஆ. துறைவாரி அமைப்பு

இ. அரசு நிறுமம் ஈ. இவற்றுள் எதுவும் இல்லை

3. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ______________ ஆகும்.

அ. ஒப்பந்தத்தால் ஆ. கூட்டாளிகளுக்கிடையே உள்ள உறவு

இ. அரசின் வழிகாட்டலில் ஈ. இவற்றுள் எதுவும் இல்லை

4 தனியாள் வணிகத்தின் பொறுப்பு ___________________

அ. வரையறாப் பொறுப்பு

ஆ. வரையறுப் பொறுப்பு

இ. வரையறுப் பொறுப்பு செலுத்தப்படாத முதல் தொகை

ஈ. இவற்றுள் எதுவும் இல்லை

5. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை ------------- என்றழைக்கிறோம்.

அ. உறங்கும் கூட்டாளி ஆ. உழைக்கும் கூட்டாளி

இ. முரண்தடைக் கூட்டாளி ஈ. துணைக் கூட்டாளி

6. கூட்டாண்மைப் பதிவு ____________

அ. கட்டாயம் ஆ.விருப்பத்தின் பேரில்

இ. அவசியமில்லை ஈ. மேற்கூறிய அனைத்தும்

7. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு

அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு

இ. ஒப்புக் கொண்ட விகிதம் ஈ.இலாப விகிதத்தில்

8. பங்குகளை வட்டத்தில் வெளியிட்டிருக்கும் பொழுது பங்கொன்றின் முகமதிப்பு ரூ.100 என்றால் அனுமதிக்கப்படும் உயர்ந்தளவு வட்டம்

அ. ரூ.5 ஆ. ரூ.10

இ. ரூ.20 ஈ. ரூ.15

9. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை – அ (TABLE A) என்பது

அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி

ஆ. இருப்பு நிலைக்குறிப்பின் மாதிரிப் படிவம்

இ. நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி

ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

10 நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது

அ. அரசால்

ஆ. இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

இ. இயக்குநர் அவையால்

ஈ. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்களால்

11. ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவிக்கையை அனைத்து உறுப்பினர்களுக்கும் கூட்ட நாட்களுக்குக் குறைந்தது ------- நாட்களுக்கு முன்னராவது தரவேண்டும்.

அ. 21 ஆ. 15 இ. 7 ஈ. 5

12. ஒரு கூட்டத்திற்குத் தேவையான குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை ------ எனப்படும்.

அ. பகராள் ஆ. குறைவெண்

இ. நிகழ்ச்சிக் குறிப்பேடு ஈ.கடனாளர்கள்

13. எச்சரிக்கையான ஊகவணிகர் ----------- எனப்படுவார்.

அ. கலைமான் ஆ. காளை

இ. முடவாத்து ஈ. கரடி

14 போல்ட் என்பது ----------- பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.

அ. மும்பை ஆ. சென்னை

இ. கொல்கத்தா ஈ.ஹைதராபாத்

15 பத்திரங்கள் ஒப்பந்தச் சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது

அ. 1952 ஆ.1956 இ.1964 ஈ. 1966

16 பங்காதாயம் கூட்டுறவில் ------------- அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அ. பங்கு முதல்

ஆ.பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்

இ.ஆதரவின் அடிப்படையில்

ஈ. இவை எதுவும் இல்லை

17 கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு

அ. 50 ஆ. 60 இ. 100 ஈ. வரம்பு எதுவும்இல்லை

18 பொதுக் கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது

அ. வரையறுக்கப்பட்ட சுதந்திரம்

ஆ. செயல்பாட்டு சுதந்திரமின்மை

இ. கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம்

ஈ. வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

19 அரசு நிறுமம் இவற்றின்கீழ் பதிவுசெய்யப்படுகிறது

அ. மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம்

ஆ. இந்திய நிறுமச்சட்டம் 1956

இ. அரசாணை

ஈ. அரசியல் அமைப்பு சாசனம்

20 இராணுவப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு------------ அமைப்பே ஆகும்.

அ. பொதுத் துறை ஆ. வாரிய அமைப்பு

இ. துறைவாரி அமைப்பு ஈ. இயக்குனரவை

## பகுதி ஆ

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு மட்டும் விடையளி** **7 X 2 = 14**

**21-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்**

21 கர்த்தாவின் பொறுப்பு எத்தகையது?

22 இளவர் கூட்டாளி என்பவர் யார்?

23 நிறுமத்தின் தன்மைகள் இரண்டினைக் கூறு

24 சட்ட முறைக் கூட்டம் என்றால் என்ன?

25 முடவாத்து என்று யாரைக் குறிப்பிடுவர்?

26 இராபர்ட் ஓவன் பற்றி எழுதுக?

27 தமிழ்நாடு சிறு தொழில் நிறுமம் (TANSI) எந்த அமைப்பின் கீழ் வரும்?

28 வரையறாப் பொறுப்பினால் விளையும் தீமை என்ன?

29 கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கும் அரசின் சலுகைகள் யாவை? (ஏதேனும் இரண்டு)

30 நிறுமத்தின் பொது இலச்சினை (Common seal) பற்றிக் கூறுக.

**பகுதி – இ**

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **7 X 3 = 21**

**31-வது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

31 ஒரு நிறுமத்தின் மேலாண்மை கட்டமைப்பு குறித்து சுருக்கமாக எழுதுக.

32 கூட்டுருவாக்கச் சான்றிதழ் என்றால் என்ன? இது எந்நிறுமத்திற்குக் கட்டாயமாகத் தேவைப்படும்?

33 கூட்டாண்மைப் பதிவு செய்யாமையால் ஏற்படும் விளைவுகள் ஏதேனும் மூன்றைக் கூறுக.

34 சட்டமுறை நிறுமம் என்றால் என்ன? எ.கா. தருக

35 பன்னாட்டு நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் மூன்று)

36 மக்களாட்சி முறையில் மேலாண்மை விளக்குக.

37 அரசு தொழிலமைப்பை எவ்வாறு உருவாக்கலாம்?

38. தனியாள் வணிகம் வரைவிலக்கணம் தருக.

39 தனி நிறுமம், பொது நிறுமம் – உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கூறு.(குறைந்தது மற்றும் அதிகபட்சம்)

40 ஊக வணிகர்களின் வகைகளைக் குறிப்பிடுக.(ஏதேனும் மூன்று)

## பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 X 5 = 35

41 கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

(அல்லது)

அரசுத் தொழிலின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்து)

42 அமைப்பின் கோட்பாடுகளில் ஐந்தினை விளக்குக.

(அல்லது)

இயக்குநர்களின் அதிகாரங்களை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

43 தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை எழுதுக. (ஏதேனும் ஐந்து)

(அல்லது)

நிறுமத்தின் ஏதேனும் ஐந்து வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

44. கூட்டுறவு அமைப்பின் தன்மைகள் ஐந்தினை விளக்குக.

(அல்லது)

பங்குமாற்றகத்தின் தீமைகளைச் சுருக்கமாக எழுதுக. (ஏதேனும் ஐந்து)

45 தனிநபர் வியாபாரத்தின் நன்மைகளை மட்டும் விளக்குக. (ஏதேனும் ஐந்து)

(அல்லது)

கூட்டாளிகளின் வகைகளைச் சுருக்கமாக அட்டவணைப்படுத்துக. (ஏதேனும் ஐந்து)

46 அமைப்பு முறையேடு – செயல்முறை விதிகள் வேறுபடுத்துக. (ஏதேனும் ஐந்து)

( அல்லது)

முன்னுரிமைப் பங்குகளின் வகைகளில் ஐந்தினை விளக்குக.

47 தகவலறிக்கை என்றால் என்ன? அதன் உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 10)

(அல்லது)

“சிறுதுளி பெருவெள்ளம்” என்ற கூற்றுக்கு இணங்க பரஸ்பர நிதி பற்றி எழுதுக.